பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 27 திங்கட்கிழமை (12.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 106

## தேர்தல் ஆணையரோடு ஜனாதிபதி ஆலோசனை

### திடீர்ப் பொதுத் தேர்தல் குறித்து ஆராய்வு?

கொழும்பு,மார்ச்12

**தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்காவை திடீரென அழைத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவருடன் சுமார் ஒன்றரை மணித்தியாலம் கலந்தாலோசனை நடத்தியிருக்கிறார்.**

**திடீர்ப் பொதுத்தேர்தலுக்கான முதற்கட்ட நடவடிக்கையாக இச் சந்திப்பு இருக்கலாம் என சில அரசியல் வட்டாரங்கள் ஊகம் தெரிவிக்கின்றன.**

கடந்த புதன்கிழமை இச்சந்திப்பு நடைபெற்றது. எனினும் ஜனாதிபதிக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து உத்தியோகபூர்வத் தகவல் ஏதும் வெளியாகவில்லை.

அதேவேளை அன்று (புதன்கிழமை ) இரவு நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, உட்கட்சிப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படா விட்டால் விரைவில் பொதுத் தேர்தலைத் தாம் நாடுவார் என அங்கு கோடி காட்டியிருப்பதால், அந்த விடயம் குறித்தே(பொதுத் தேர்தல் குறித்தே) தேர்தல் ஆணையாளரோடு

(04ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் குறித்து மக்கள் குழு - அரச அதிபர் இன்று சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள், இன்று அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாட உள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில், அரச அதிபருடன் கலந்துரையாடவுள்ள பிரச்சினைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம், மக்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, செயலாளர் எஸ்.பரமநாதன், அருட்திரு பி.நேசகுமார், அருட்திரு. எஸ்.செல்வநாயகம், அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அரச அதிபரிடம் மக்கள் குழு முன்வைத்து வலியுறுத்தவுள்ள விடயங்கள் வருமாறு -

(03ஆம் பக்கம் பார்க்க)

## குறிகாட்டுவான் - தலைமன்னார் படகுச் சேவை நடத்துமாறு ஜனாதிபதியிடம் ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்12

குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை ஓரளவிலேனும் தீர்க்கும் முகமாக குறிகாட்டுவான் - தலைமன்னார் படகுச் சேவை ஒன்றை நடத்த வேண்டும். அன்றேல் காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு நாளாந்தம் இரண்டு பயணிகள் கப்பல் சேவைகளை நடத்த வேண்டும்.

இக்கோரிக்கையை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளார்.

யாழ். ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து, உணவுத் தேவை, தகவல் அறியும் சுதந்திரம், தபால், கல்வி, மின்சாரம், உயர்பாதுகாப்பு வலயம், தொழில் பாதிப்பு போன்ற விடயங்கள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டன.

அவற்றுள் பின்வருவன அடங்கும்:

★ கப்பல் மற்றும் விமானப் பயணங்களை மேற்கொள்வதில் குடாநாட்டு மக்கள் பெரும் கஷ்டங்களையும் தேவையற்ற சிரமங்களையும் எதிர்நோக்க நேர்ந்துள்ளது.

விமானப் போக்குவரத்துக்கான அதிக செலவு, காலதாமதம், பயண அனுமதி, பயணச்சீட்டு ஆகியவற்றில் மக்கள் பெரும் தடங்கல்களையும் தாமதங்களையும் எதிர்கொள்கின்றனர். (04ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் அவலங்களை கருத்தில் எடுக்காமல் இராணுவ நடவடிக்கையில் அரசு முனைப்பு

### ஒன்றரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்தமை குறித்து தமிழ்க்கூட்டமைப்பு அதிர்ச்சி, கவலை

கொழும்பு, மார்ச் 12

அரசு கிழக்கில் இராணுவ நடவடிக்கையில் மாத்திரமே முனைப்புக் காட்டுகின்றது. மக்கள் இடம்பெயர்ந்து அவலப்படுவது பற்றியோ அவர்கள் உயிர் ஆபத்துக்களை எதிர்நோக்குவது பற்றியோ சிறிதும் கவலைப்படவில்லை.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இராணுவ நடவடிக்கையில் மாத்திரம் கவனஞ்செலுத்தாமல் மக்களைப் பற்றியும் சிந்தித்து தற்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்திருக்கும் ஒன்றரை லட்சம் தமிழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கூறியதாவது:- மட்டக்களப்பு நகரில் இருந்து புலி களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி படையினர் மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக ஒரே நாளில் ஒன்றரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இது எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கும்

(04ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. இராணுவத் தாக்குதல்கள் தீவிரம் அரச பகுதிக்கு நேற்றும் மக்கள் வருகை

மட்டக்களப்பு,மார்ச் 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நடத்தப்பட்டு வரும் இராணுவத் தாக்குதல்கள் சனிக்கிழமை சற்றுத் தணிந்திருந்தபோதும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களான படுவான்கரை, கொக்கட்டிச்சோலை, பெரிய போரதீவு போன்ற பிரதேசங்களை நோக்கி பல் குழல் பீரங்கி மற்றும் மோட்டார் குண்டுகள் சகிதம் தொடர் தாக்குதல்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடத்தப்பட்டன என்று அங்கிருந்து வெளியேறி நண்பகல் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை வந்தடைந்த மக்கள் தெரிவித்தனர்.

தாக்குதல் காரணமாக எழும் குண்டு வெடிப்புச் சத்தம் மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, செங்கலடி, கிரான், சித்தாண்டி, வந்தாறுமூலை, கொடுவாமடு, பலாச்சோலை, கறுவன்கேணி உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று மாலைவரை கேட்ட வண்ணம் இருந்தன.

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை முற்றாகக் கட்டுப்படுத்தும் பொருட்டே இப்பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுப் பகல் நேரத்திலும் தாக்குதல்கள் நீடித்தன. அவற்றுக்கு மத்தியிலும் மேலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குவந்துகொண்டிருந்தன. நேற்று இவ்வாறு இடம்பெயர்ந்து வந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. (அ-ஐ)

## உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட மகஸின் கைதிகள் முடிவு

கொழும்பு,மார்ச் 12

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அங்கு சென்று பார்வையிட்டு அவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்ததற்கிணங்க இன்று உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட கைதிகள் தீர்மானித்துள்ளனர்.

நேற்றுப் பகல் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே.ஈழவேந்தன், செல்வம் அடைக்கலநாதன், பத்மநாதன், ப.அரியநேந்திரன் மற்றும் ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இக்கைதிகளைச் சென்று பார்வையிட்டனர்.

இக்கைதிகளின் பிரச்சினை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நீதி அமைச்சர் டிலான் பெரேரா தற்போது வெளிநாடு சென்றிருப்பதால் இந்த உண்ணாவிரதப் போராட்டம் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பில்லை. அவர் நாடு திரும்பியதும் அவரிடம் நாம் இதுவிடயம் குறித்துப் பேசி நல்ல தீர்வைப் பெற்றுத்தருவோம் என்று கூட்டமைப்பினர் கைதிகளிடம் கூறினர். அத்தோடு இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறும் கோரினர்.

இதனையடுத்து, இன்று இப்போராட்டத்தைக் கைவிட கைதிகள் சம்மதம் தெரிவித்தனர். (த-7)

## மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும்

### சர்வதேச மன்னிப்புச் சபை சொல்கிறது

கொழும்பு, மார்ச் 12

ஸ்ரீலங்காவில் இடம்பெற்று வரும் கடத்தல்கள், படுகொலைகள், தடுத்து வைத்தல், மனித உரிமை மீறல்கள் போன்றன தொடர்பாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கூட்டத்தில் பதில் தரவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. அத்துடன் ஸ்ரீலங்காவில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

இன்று 12 ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற உள்ள மனித உரிமை சபையின் கூட்டத்தில் மகிந்த சமரசிங்க உரையாற்ற உள்ள நிலையில் மன்னிப்புச் சபை இக் கடிதத்தை அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபை சிறிலங்காவின் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ ஊடுருவும் படையினர் மீது மன்னாரில் விடுதலைப் புலிகள் தாக்குதல்; சிப்பாய் மரணம்

கிளிநொச்சி,மார்ச் 12

மன்னார் மாவட்டத்தில் மடு, பெரிய தம்பனைப் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் படையணி மீது நேற்றுக்காலை தாம் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் அந்த அணியைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது. அவரிடம் இருந்த ஆயுத தளபாடங்களை மீட்டுள்ளோம் - என்றும் விடுதலைப் புலிகள்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சடலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினூடாக படை அதிகாரிகளிடம் கையளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர். (அ-1-ரி)

## வவுனியாவில் படையினர் ஷெல் சிறார்கள் இருவர் படுகாயம்

வவுனியா,மார்ச் 12

வவுனியாவிலிருந்து பாலமோட்டை கிழவிக்குளம் கிராமங்கள் மீது சிறிலங்காப் படையினர் நடத்திய செறிவான ஷெல் தாக்குதல்களில் 2 சிறார்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா ஓமந்தை பின்தளப் பகுதியிலிருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் இராணுவத்தினர் செறிவான ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இந்த எறிகணைத் தாக்குதலில் கிழவிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த விஜயசிங்கம் தனுஸ்காந்த் (வயது - 9), இலங்கேஸ்வரன் மிதுசன் (வயது - 10) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் மிதுசன் ஆபத்தான நிலையில் வவுனியா பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Jaffna District Master Bakers Association

### பாண் விலை மாற்றம்

**சகல பேக்கரி உரிமையாளர்களுக்கும்**

பின்வரும் பேக்கரி உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கு அரச அதிபரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் விலை, நிறை என்பனவும் தீர்மானம் செய்யப்பட்டுள்ளன.

| பொருள் | நிறை | விலை | பொருள் | நிறை | விலை |
|---|---|---|---|---|---|
| பாண் | 450கிராம் | 32ரூபா | நல்பனிஸ் பெரிது (தனி) | 50கிராம் | 10ரூபா |
| ரீ பனிஸ் 1ரோடி | 150கிராம் | 16ரூபா | ஸ்பொஞ் கேக் | 35கிராம் | 10ரூபா |
| சங்கிலி பனிஸ் (தனி) | 150கிராம் | 16 ரூபா | கறி பனிஸ் | 150கிராம் | 15ரூபா |
| கொம்பு பனிஸ் (தனி) | 75 கிராம் | 10 ரூபா | அடை கேக் | 50 கிராம் | 15ரூபா |
| நல்பனிஸ் சிறிது (தனி) | 10கிராம் | 2ரூபா | பட்டர் கேக் | 1கிலோ | 350ரூபா |

மேற்படி பொருள்களின் நிறை, தரம், விலை என்பவற்றைப் பேணி விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/52137) நிர்வாகம்.



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் வீதி ஆரம்பத்தில் 3பரப்பு காணியில் கடைக் கட்டடத்துடன், வளவு வருமானத்துடனும் சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- தொ.பே. 0773151530

(இரவு 7 மணிக்குப் பின் 0212225738) (C 52169)



## வாடகைக்கு

நல்லூர் ஆலயசூழலில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: அ.சோமசேகரம்
111/3, கோயில் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.
(58723) தொ.பே: 0212227244


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்

**சிவசுப்பிரமணியம் சுரேஸ்சன்**

B.Com. Special in Management

08.03.2007 வியாழக்கிழமை கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவில் சிறப்புப் பட்டம் பெற்றதையிட்டு வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்றுச் சிறப்போடு வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
சு.ஈஸ்வதாஸ்
குடும்பத்தினர்.

கோட்டைகாடு,
மல்லாகம். (58725)


## O/L மாணவர்களே, ஆசிரியர்களே!

### வீடற்றவன் நாவலின்

### கதைச் சுருக்கம்- விளக்கம்- விமர்சனம்



கலாபூஷணம்

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை**

எழுதியது

ரூபா 75.00

(58700)


## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலகத்தில் கடமை யாற்றும் கா.ஆனந்தராசா அவர்களின் அன்புத் தாய்

**திருமதி காணிக்கை பொன்னுப்பிள்ளை**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்குப் பிரதேசசபை,
(58730) காங்கேசன்துறை, மல்லாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் அளப்பரிய சேவையினை நல்கி இன்று (12.03.2007) சேவையிலிருந்து ஒய்வுபெறும் எமது ஆசிரியர்

**கணபதிப்பிள்ளை துரைசிங்கம்**

அவர்கள் சகல சௌபாக்கியங்களுடன் நீடுழி காலம் வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
யா/புத்தூர் ஸ்ரீ பஞ்சுரீக வித்தியாலயம், புத்தூர்.
(58714)

## மரண அறிவித்தல்

### திருமதி சபாபதி இராசம்மா

சங்கானை, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி சபாபதி இராசம்மா நேற்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதியின் அன்பு மனைவியும் விசயரத்தினம் (இலங்கை மின்சார சபை) விசயலோகன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (12.03.2007) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.விசயரத்தினம்.
(மகன்)

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை (58738)

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மல்லாக உப அலுவலகத்தில் கடமை யாற்றும் அ.கதிர்காமநாதன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி அரசதுங்கம் தெய்வநாயகி அம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்குப் பிரதேசசபை,
(58730) காங்கேசன்துறை (மல்லாகம்).

## 33 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா குமாரசாமி** (கிளாக்கர்)

(கனடா)

எமது கிராமத்தினதும் சங்கத்தினதும் வளர்ச்சியில் முன்னின்று உழைத்த குடும்பத்தின் தலைவரை நினைவு கூர்வதுடன் எமது அனுதாபங்களை அவரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கரத்தை இந்து வாலிபர் சங்கமும்,
சங்கரத்தை மக்களும்.
(58739)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

# வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 10.02.2007 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## சைவப்பிதா பொன்.சாம்பசிவம் ஆசிரியர்

(கல்வித் திணைக்கள உத்தியோகத்தர், சைவர் கழக அமைப்பாளர், இலங்கை முத்தமிழ் மன்றத் தலைவர், சங்கானை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர், சங்கானை பொன்ஸ் கல்லூரி அதிபர், சங்கானை மத்தி இந்து இளைஞர் மன்றம், மாதர் இந்து மன்றம், சிறுவர் இந்து மன்றம் ஆகியவற்றின் ஸ்தாபகர்)

**மண்ணில்** 05.10.1954  **விண்ணில்** 10.02.2007

### தாங்க முடியவில்லை எங்கள் அப்பாவே!

எங்கள் உயிர் அப்பாவே!
நீங்கள் தந்த பாதுகாப்பு எங்கே
நீங்கள் தந்த கல்வி எங்கே
கல்வியின் ஆதரவு எங்கே
எங்களுக்கு நோய் வந்தால் நீங்கள்
கவனிக்கும் கவனிப்பு எங்கே
நீங்கள் சாப்பிடும்போது எங்களுடன் சேர்ந்து
சாப்பிட்டு மகிழும் மகிழ்வு எங்கே
எங்கள் குறும்புக் கதை கேட்டு
நீங்கள் சிரிக்கும் புன்சிரிப்பு எங்கே
மழை, வெயில் எங்களில் பட்டால்
நீங்கள் துடிக்கும் துடிப்பு எங்கே
எங்களை உருகி அழைக்கும்
உங்கள் அன்பு அழைப்பு எங்கே
வெள்ளி தவறாது கோயில் கூட்டிச்
செல்லும் மகிழ்வு எங்கே
உடன் பிறப்புகளுடன் காட்டும்
உங்கள் பாசம் எங்கே
எங்களை காணத்தவறினால்
நீங்கள் படும் பாடு எங்கே
எங்கள் விருப்பங்களைச் சொல்லும்போது
ஓம் என்று சொல்லி செய்துதரும் செயல் எங்கே
விழாக்களுக்கு வெளிக்கிடும் போது
எங்களை அலங்கரிக்கும் அலங்கரிப்பு எங்கே
இன மத பேதமின்றி எல்லோரையும்
அரவணைக்கும் அரவணைப்பு எங்கே
பொதுச் சேவைக்கு நீங்கள் காட்டும்
மன விரிசல் எங்கே
உதவி கேட்போருக்கு மறுப்புக் கூறாது
செய்யும் உங்கள் மனம் எங்கே
எங்களை கட்டியணைக்கும் உங்கள்
கரங்கள் எங்கே
துன்பப்பட்டவர்களுக்கு கூறும்
ஆறுதல் எங்கே
இறைவனின் புகழை கூறும் உங்கள்
நாவன்மை எங்கே
எங்கள் உயர்ச்சியை கண்டு நீங்கள்
மகிழும் மகிழ்வு எங்கே
எல்லோரிடமும் அன்பு காட்டும் உங்கள்
மலர்ந்த முகம் எங்கே
இப்படியெல்லாம் உயிர்கொடுத்து
கவனித்து விட்டு எப்படி அப்பா
எங்களை விட்டுப் பிரிந்தீர்
எங்கள் ஆயுள் பூராக எங்களை எல்லாம்
சுற்றி நின்று எங்கள் உயர்ச்சிக்கு ஆசியும்
ஆதரவும் நல்கவேண்டும் என்று
உங்கள் பாதாரவிந்தங்களை மலர்தூவி
பணிகின்றோம்.

இன்று (12.03.2007) திங்கட்கிழமை எமது பொன் மீனா இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைப்பதுடன் அன்னாரின் பிரிவுத் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

* இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவு கூர்ந்து ஏற்றுக்கொள்ளவும்.

பொன் மீனா இல்லம்,
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
தொ.பே: 0776549652 (சி/52172)

விஜயரஞ்சினி (மனைவி),
கேசிகா(மகள்), தனாதிபன்(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# விரிசல் நிலையை நோக்கி இந்திய - இலங்கை உறவு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற பின்னரான கடந்த பதினாறு மாத காலத்தில் இலங்கைக்கும் அயல் வல்லாதிக்க நாடான இந்தியாவுக்கும் இடையிலான நல்லுறவில் பெருமளவு விரிசல் ஏற்படத் தொடங்கியிருப்பதை அரசியல் நோக்கர்கள் மேம்போக்காக வேனும் அவதானிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் பின்னணியாக அமைந்தாலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற தனிநபரின் ஆளுமை, சிந்தனைப்போக்கு, செயலாற்றும் பாங்கு, நம்பகத்தன்மை ஆகியவை தொடர்பாக புதுடில்லிக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியும், அதன் காரணமாக "நான் இந்தியாவின் ஆத்மார்த்த நண்பன்" என்று இந்தியத் தலைவர்களிடம் நேரடியாகவே ஜனாதிபதி மஹிந்தர் அடிக்கடி கூறும் வாசகத்தின் இதயபூர்வ தன்மை குறித்து புதுடில்லித் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனமும் அவற்றில் முக்கியமானவை எனலாம்.

இந்தப் பதினாறு மாதகால ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதி மஹிந்தர் இரண்டு தடவைகள் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கின்றார். அவரது கடைசி இந்திய விஜயத்தின்போது இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் சேர்ந்து அவர் புகைப்படத்துக்கு 'போஸ்' கொடுக்க எடுத்த முயற்சி, இந்திய அதிகாரிகளினால் வேண்டுமென்றே நாசூக்காக வெட்டி விடப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதன்மூலமும், அவருக்கான விமான நிலைய வரவேற்பை உயர்நிலைத் தரத்திலிருந்து இறக்கி அடுத்த கட்டத்தில் இந்தியா முன்னெடுத்ததன் வாயிலாகவும் அவருடனான நட்புறவுத் தொடர்பாடலில் தனக்குள்ள 'பின்னடிப்பை' புதுடில்லி பூடகமாக வெளிப்படுத்திக்கொண்டது. எனினும் இந்த இரண்டு விஜயங்களின் போதும் இந்திய உயர் மட்டத் தலைவர்கள் அவரைச் சந்தித்து அவருடன் விரிவாக உரையாடத் தவறவில்லை.

இதேவேளை மஹிந்தரின் இந்தப் பதினாறு மாத ஆட்சிக்காலத்தில் இந்திய வெளியுறவுத்துறையில் முன்னர் செயலாளராக இருந்த ஷியாம் சரண் இரண்டு தடவைகளும், தற்போதைய செயலாளர் சிவசங்கர் மேனன் ஒரு தடவையும் (கடந்த நவம்பரில்) இலங்கைக்கு விஜயம் செய்தனர். அதேபோல இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் ஒரு தடவை (கடந்த டிசம்பரில்) இலங்கைக்கு வந்தார்.

இந்த நான்கு விஜயங்களின் போதும் கொழும்பில் அவர்கள் ஜனாதிபதி மஹிந்தருடன் உயர்மட்டச் சந்திப்பில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி மஹிந்தருடன் அவரது பதினாறு மாத ஆட்சிக்காலத்தில் புதுடில்லியிலும் கொழும்பிலும் இடம்பெற்ற இந்த ஆறு உயர்மட்டச் சந்திப்புகளின் பதிவுகள் பற்றிய ஆவணங்களைப் பரிசீலித்த புதுடில்லித் தலைமை, ஒரு குறுகிய காலத்தில் மஹிந்தர் ஒப்புவித்த விடயங்களில் அவர் காட்டியுள்ள தடம் புரள்கை குறித்து அதிருப்தியும், விசனமும், ஆச்சரியமும் அடைந்திருப்பதாகவும் தெரிகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இந்தியாவின் கரிசனையை மஹிந்தர் புறம் ஒதுக்கி நடக்கின்றார் என்றும், இது தொடர்பாகக் காலத்துக்குக் காலம் தாம் கூறிய உறுதி மொழிகளை அவர் உதாசீனம் செய்து - விட்டேத்தியாக - செயற்படுகின்றார் எனவும் புதுடில்லி கருதுவதாகவும் தெரிகிறது.

மேலும் அருகில் உள்ள வல்லாதிக்க நாடான இந்தியாவை விலத்தி, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளின் அரவணைப்புக்குள் மஹிந்தரின் நிர்வாகம் 'குளிர் காய்வதாக' புதுடில்லி உணர்கின்றது எனவும் தெரிகின்றது.

மேற்படி கொழும்புக்கான விஜயம் ஒன்றின்போது புதுடில்லித் தலைமை இதனை நேரடியாகவே மஹிந்தரிடம் சுட்டிக்காட்டி அதிருப்தி தெரிவித்தது என்றும் அறிய முடிகின்றது.

இதேசமயத்தில் -

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் அதன் நேரடி விளைவுகளையும் தாக்கங்களையும் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல் இந்தியாவுக்கு இருக்கத்தக்கதாக, அந்த நிலையைக் கவனத்தில் எடுக்காமல் - இது தொடர்பான இந்தியாவின் சிரத்தையை புறமொதுக்கி - கொழும்பு பொறுப்பற்று நடக்கிறது. இந்திய சிரத்தையைத் தட்டிக்கழிக்கிறது. அளவுக்கு அதிகமாக அமெரிக்காவை இவ்விடயத்துக்குள் இழுத்து வந்து நுழைத்து, இந்தியாவின் தென்கோடியில் அமெரிக்க ஈடுபாட்டுடன் கூடிய ஒரு மையத்தை உருவாக்க கொழும்பு துணை போகிறது - என்றெல்லாம் புதுடில்லி அரசியல் தலைமை சீறி, சினப்பதாகவும் நம்பகமாக அறியவருகின்றது.

அமெரிக்காவில் வசிப்பதற்கான 'கிறீன் கார்ட் விஸா' கொண்டவர்களை அமெரிக்கப்பிரஜை என்றே கருதமுடியும். அத்தகைய தகுதியுடையவர்கள் ஜனாதிபதி மஹிந்தரின் சகோதரர்களான அவரது ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவும், பாதுகாப்புச் செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவும். மஹிந்தர் நாட்டின் ஜனாதிபதி என்றாலும் அவரின் இந்த இரு சகோதரர்களுமே நாட்டை ஆளுபவர்கள் என்ற அரசியல் யதார்த்தம் - நிலைப்பாடு - கருத்து - பொதுவாக இலங்கை அரசியலின் அவதானிகளின் மனதில் ஆழமாகப் புதைந்திருக்கும் ஒன்றே. இந்நாட்டு மக்களினது கருத்தும் அதுவாகவே உள்ளது.

தனது பிரஜைகள் போன்ற இந்த இருவர் மூலமும் அமெரிக்காவே பின்னணியில் நின்று இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை தனக்குச் சார்பான விதத்தில் வழி நடத்துகின்றது என்ற எரிச்சல் ஏற்கனவே இந்தியாவுக்கு உள்ளது.

இந்தப் பின்னணியில் இப்போது சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதல் தொடர்பான புதிய ஒப்பந்தம் ஒன்றை இலங்கையும் அமெரிக்காவும் பாதுகாப்பு அமைச்சு மட்டத்தில் செய்துகொண்டிருக்கின்றமை இந்தியாவுக்கு மேலும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏற்கனவே கொழும்பு மற்றும் புதுடில்லித் தலைவர்களுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட கடிதப் பரிமாற்றங்கள் மற்றும் ஆவணப்பரிமாற்றங்களில் இந்தியாவும், இலங்கையும் தமது பிரதேசங்களை ஒன்று, மற்றதன் சிரத்தைக்குரிய விடயங்களுக்கு எதிராகப் பிற நாடு ஏதும் பயன்படுத்த அனுமதிப்பதில்லை எனத் தீர்மானித்திருந்தன. அந்த இணக்கத்தை கிடப்பில் தூக்கி வீசும் வகையிலும், இலங்கையை அமெரிக்கா தனது விநியோகத் தளமாக அல்லது வழங்கல் மையமாகப் பயன்படுத்த வழிசெய்யும் விதத்தில் இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகப் புதுடில்லி கருதுகிறது.

இவை, கொழும்பு தொடர்பான புதுடில்லியின் இராஜதந்திர அணுகுமுறையில் பெரும் திருப்பத்தை அல்லது மாற்றத்தை விரைவில் உருவாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதுடில்லியில் அதிகார மற்றும் செல்வாக்கு ஸ்திரத்தைக் கொண்ட வலுவான அரசியல் தலைமை இல்லாமையும் -

புதுடில்லியின் அழுத்தத்துக்கு மசிந்து கொடுக்காத பிடிவாதத் திமிர்ப் போக்கை இந்திய விவகாரத்தில் கைக்கொள்ள கொழும்பு தீர்மானிக்குமானால், அதை எதிர்கொண்டு சமாளிப்பதற்கான உரிய தந்திரோபாயம் மற்றும் இராஜதந்திர யுக்தியுடன் கூடிய மாற்றுத் திட்டம் ஏதும் புதுடில்லியிடம் இல்லாமையும் -

இவ்விடயத்தில் புதுடில்லியின் இராஜதந்திர அணுகுமுறை மாற்றங்களை தாமதிக்க வைக்கின்றன என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

# கடத்தப்பட்டோர், காணாமற்போனோர்; நேற்று மட்டும் 8 முறைப்பாடுகள் பதிவு

யாழ்ப்பாணம். மார்ச் 12

கடத்தப்பட்டோர் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பாக எட்டு முறைப்பாடுகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த பரமசாமி திவாகரன் (வயது25) நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அவரது வீட்டில் இருந்தும் -

அரியாலையைச் சேர்ந்த மா. குருதராஜ் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் அவரது வீட்டில் இருந்தும்-

அரியாலை,நெடுங்குளத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அழகேஸ்வரன் (வயது29) கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 1.40 மணியளவில் அவரது வீட்டில் இருந்தும் -

மானிப்பாய், மேதர் லேனைச் சேர்ந்த யேசுதாசன் ஜெயசுதன் (வயது25) கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் அவரது வீட்டில் இருந்தும் - இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்தப்பட்டனர் என்று அவரவர்களின் உறவினர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**காணாமற் போனோர்**

நல்லூர் கோயில் வீதியைச் சேர்ந்த தேவதாஸ் கிருஸ்ண பிரசன்னா(வயது26) யாழ். நகருக்குச் சென்றவர் மீண்டும் வீடு திரும்பவில்லை என்றும் திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசிங்கம் துசேந்திரன் என்பவர் சீட்டுக் காசு ஒன்றரை லட்சம் ரூபாவுடன் யாழ். நகருக்குச் சென்று வீடு திரும்பவில்லை என்றும் -

அச்சுவேலியைச் சேர்ந்தவர்களும் காப்புறுதி நிறுவனக் கிளையொன்றில் பணிபுரிபவர்களுமான எஸ்.பிரதீப், எஸ்.சந்திரகாந்தன் ஆகியோர் கடந்த சனிக்கிழமை மோட்டார் சைக்கிளில் யாழ்.நகருக்குச் சென்றவர்கள் தான் அதன் பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை என்றும் - அவர்களது உறவினர்களால் நேற்று ஆணைக் குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-1)

# இலங்கையை இந்தியா கடுமையாக எச்சரிக்க வேண்டும் என்கிறார் வைகோ

## பிரதமர் மன்மோகனை நேரில் சந்தித்து வற்புறுத்தல்

கொழும்பு, மார்ச் 12

ஸ்ரீலங்கா கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டதனைச் சுட்டிகாட்டி சிறிலங்கா அரசை எச்சரிகை செய்யும்படி வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை புதுடில்லியில் அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தித்தபோதே ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ இந்த வேண்டுகோளை விடுத்தார். அத்துடன் இரண்டு கோரிக்கை மனுக்களையும் அவர் கையளித்தார்.

மனுக்களை பெற்றுக்கொண்ட பிரதமர் மன்மோகன் சிங், "சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் இருந்து தமிழ்நாட்டு மீனவர்களை காக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" - என வைகோவிடம் உறுதியளித்தார்.

"ஸ்ரீலங்கா கடற்படையினர் தொடர்ந்தும் தமிழ்நாட்டு மீனவர்களை தாக்கி வருகின்றார்கள். ஆனால் இந்திய கடற்படையும், கடலோர காவல் படையும் தமிழ்நாட்டு மீனவர்களை காக்கும் நடவடிக்கை எடுக்காமல் கைகட்டி வேடிக்கை பார்க்கிறார்கள்.

ஸ்ரீலங்கா அரசை கடுமையாக எச்சரிக்க வேண்டும். சிறிலங்கா கடற்படையினரின் தாக்குதலில் இருந்து தமிழ்நாட்டு மீனவர்களை காப்பாற்ற இந்திய கடற்படைக்கும், கடலோர காவற்படைக்கும் உத்தரவிட வேண்டும்" - என்று முதலாவது மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

'இலங்கையில் தமிழ்மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் கொலை வெறித் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனை உடனடியாக நிறுத்த சிறிலங்கா அரசை இந்திய அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் - என்று இரண்டாவது மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதமரை சந்தித்த பின்னர் வெளியே வந்த வைகோ செய்தியாளர்களிடம் பேசியபோது, - "எங்களது நிலை மிகத்தெளிவாக உள்ளது. ஈழப்பிரச்சனையில் ஈழத்தில் உள்ள விடுதலைப் புலிகளை ஆதரிக்கிறோம். அவர்கள் தான் அங்குள்ள தமிழ் மக்களுக்காக, அவர்களின் விடுதலைக்காக போராடி வருகிறார்கள். மொத்த தமிழ்மக்களும் விடுதலைப் புலிகளின் பக்கம்தான் உள்ளனர்.

ஈழத்தில் உள்ள தமிழர்களை, அவர்களது போராட்டத்தை, விடுதலைப் புலிகளின் போராட்டத்தை தொடர்ந்து ஆதரிக்கறோம். ஆதரிப்போம்" - என்று உறுதிபடக் கூறினார். (அ-ஐ)

# பாண்டிருப்பில் கிளைமோர்: 2அதிரடிப்படையினர் பலி!

அம்பாறை - கல்முனை - பாண்டிருப்பு பகுதியில் நேற்றுக் காலை 8.55 மணியளவில் வெடித்த கிளைமோர் குண்டினால் விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் இருவர் கொல்லப்பட்டனர். மற்றுமொரு விசேட பொலிஸ் அதிரடிப்படை உத்தியோகத்தர் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காலையில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படைப் பொலிஸாரை இலக்குவைத்தே இக்கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது. வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளில் கிளைமோர் கண்ணிவெடி பொருத்தப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. (அ-ஐ)

# வல்லையில் விபத்து சிறுவன் மரணம்

நெல்லியடி மார்ச்,12

யாழ். பருத்தித்துறை வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த மினிபஸ் ஒன்று நேற்றுப்பிற்பகல் 3 மணியளவில் வல்லை வெளியில் விபத்துக்குள்ளானது. மேற்படி விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்; 25பயணிகள் காயம் அடைந்தனர்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த தங்கராசா முரளீதரன் (வயது12) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

வாகனம் பனை மரங்களுடன் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டது.

காயமடைந்தவர்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-1-115)

# சாதாரண தபால் சேவை முத்திரை 7 ரூபாவாக உயரும்?

கொழும்பு, மார்ச் 12

எதிர்வரும் குறுகிய காலத்திற்குள் தபால் சேவைகளுக்கு முத்திரைகளின் பெறுமானங்களை அதிகரிக்க தபால் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கேற்ப சாதாரண தபால் சேவைக்கான முத்திரைகளின் விலை 40 வீதத்தால் - அதாவது 7 ரூபாவாக - அதிகரிக்கப்படவுள்ளது. 5 ரூபாவாக இருந்தவர்த்தக தபால் சேவைகள் கட்டணம் 15 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

இதேபோன்று வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் தபால் சேவை முத்திரைகள் அந்தந்த வேறுபட்ட நாடுகளைப் பொறுத்து அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் நிலையங்களை அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் அடிப்படையில் இயக்குவதற்கு தபால் திணைக்களம் திட்டமிட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ஐ)

# குடாநாட்டு மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ குடாநாட்டின் பத்திரிகை நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுத்தாள், மை மற்றும் அச்சு உபகரணங்களுக்கான தட்டுப்பாட்டை நீக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் இனியும் தாமதம் காட்டக்கூடாது என்பதை அரசுக்கு வலியுறுத்துவது அவசியம்.

✱ குடாநாட்டு மக்களுக்கு நாளாந்தம் 25 மெற்றிக் தொன் உணவுப்பொருள்கள் தேவை. ஆயினும் 12 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களே வந்து சேர்கின்றன.

✱ சித்திரைப் புதுவருடப் பிறப்புக்குத் தேவையான பொருள்களை முன்னுரிமை அடிப்படையில் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✱ நடைபாதை வியாபாரத்தை தடைசெய்து மக்களுக்கு நியாய விலைகளில் பொருள்கள் கிடைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

✱ கடந்த ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்னர் 707 பேர் காணாமற்போயுள்ளனர். இவர்களில் 215 பேர் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

✱ அவசர நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்ல செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவோ அல்லது வேறு ஓர் அரச சார்பற்ற நிறுவனமோ முன்வர வேண்டும்.

✱ பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படவில்லை. இதனை நிவர்த்தி செய்து குடாநாட்டு மாணவர்களுக்கு அவர்களுக்குரிய கோட்டா கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கு பல தரப்பினரதும் கூட்டுச் செயற்பாடுகள் அவசியம்.

✱ வடமராட்சி, தென்மராட்சி, வலி. மேற்கு ஆகிய இடங்களில் மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுகின்றது.

✱ மின்சாரமும் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக உள்ளதால் குழு இவ்விடயத்தில் கரிசனையாக உள்ளது.

✱ 150 சதுர கிலோமீற்றர் உயர் பாது காப்பு வலயம் அமைந்துள்ள வலி. வடக்கில் மொத்தம் 13 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் மக்களைப் பயன்படுத்த விடாது முடக்கப்பட்டுள்ளது.

- இது விடயத்தில் உயர் நீதிமன்றம் வழங்கிய முடிவுக்கு உரிய நடவடிக்கை எதுவும் துரிதமாக எடுக்கப்படவில்லை.

✱ விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் சம்பந்தப்பட்ட தரப்புகள் சமாதானப் பேச்சில் தாமதம் காட்டாது ஈடுபடவேண்டும்.

✱ மீனவர் குடும்பங்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களின் முதலீடுகள் அனைத்தும் இழக்கப்பட்டு, தற்போதும் இழந்து கொண்டே இருக்கிறார்கள்.

✱ பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு நட்டஈட்டுப் பொதி ஒன்றை அரசு வழங்க வேண்டும்.

✱ விவசாயிகளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கும் நட்டஈடு வழங்க வேண்டும். (அ-1-202-111)

## குடாநாட்டின் ட்டிச் செய்திகள் — யாழ்ப்பாணம்

# பருத்தித்துறையில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம்,மார்ச்12

பருத்தித்துறை, சாரையடிப் பகுதி நேற்று இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின்போது அப்பகுதியைச் சேர்ந்த பலபேர் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

அனைவரும் கிராமக்கோட்டடிப் பகுதியில் இருத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

காலை 5.30 மணியிலிருந்து நண்பகல்வரை தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது. (1-15)

# பரிசளிப்பு விழா

தீவக கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அ.இராசேந்திரம் தலைமையில் நடைபெறும். (1-111)

# மட்டுவில் கத்தரிக்காய் கிலோ 10 ரூபா

தென்மராட்சியில் மட்டுவில் கத்தரிக்காய் பெருமளவு சந்தைக்கு வந்துள்ளது. மேட்டு நிலப் பகுதிகளிலும் கத்தரிக்காய் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளதால் அதிகளவில் உற்பத்தியாகியுள்ளது.

மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் மேற்கு வீதியில் பிற்பகல் வேளைகளில் கத்தரிக்காய் சந்தை கூடுவதைக் காணலாம். அங்கு தராசில் வியாபாரிகளுக்கு ஒரு கிலோ கத்தரிக்காய் 10 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் அங்கு சென்று கத்தரிக்காய் வாங்கிச் சென்று தத்தமது இடங்களில் விற்பனை செய்கின்றனர்.

# விரும்பிய பொருள்களை மட்டும் வாங்கலாம்

கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு வழங்கும் அனைத்து நானாவிதப் பொருள்களையும் பாவனையாளர்கள் வாங்க வேண்டும் என்பது கட்டாயமல்ல. அவர்கள் தமக்குத் தேவையான பொருள்களை மட்டும் கொள்வனவு செய்ய முடியும். நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அநேக ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் வழங்கப்படும் அனைத்துப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்தப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுவது குறித்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார். (1-111)

# மின்கம்பத்துடன் மோதியது பவள்: வவுனியாவில் இரு படையினர் பலி!

வவுனியா உயிலம்பைக்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இராணுவத்தினர் பயணித்த பவள் கவச வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இரு படையினர் உயிரிழந்தனர். 9 படையினர் காயமடைந்தனர். வேகமாக வந்த பவள் மின்கம்பத்துடன் மோதி தலைகீழாகப் புரண்டதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் உயிரிழந்த இரு படையினரதும் சடலங்கள் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டன. காயமடைந்தவர்களும் அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த விபத்துத் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த)

# நாளை

மாசி - 29
செவ்வாய்க்கிழமை
13.03.2007
திதி: நவமி
மாலை : 05.04
நட்சத்திரம்: மூலம்
முற்பகல் : 11.45
சுபநேரம் : 10.52 - 12.22
ராகுகாலம் : 03.22 - 04.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் மிகவும் மோசமான நிலைமையிலேயே தொடர்ந்து உள்ளன. இந்த நிலைமையை கட்டுப்படுத்தவும், மனித உரிமைகள் மீறப் படுவதை தடுப்பதற்கும் சிறிலங்கா அரசாங் கம் என்ன நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றது என்பதை சர்வதேச சமூகம் அறிவது முக்கியம்.

வன்முறைகள் தொடர்பாக அரசாங் கம் விசாரணைகளை மேற்கொண்டு வரு வது வரவேற்கத்தக்கது. ஆனால் அங்கு நீதி யற்ற கொலைகள், கடத்தல்கள் மிகவும் அதிகரித்துள்ளன. கடந்த ஆண்டு இவை தொடர்பாக 1,000 முறைப்பாடுகள் பதி யப்பட்டுள்ளன. நாடு முழுவதும் நூற்றுக் கணக்கானவர்கள் காணாமற்போயுள்ளனர்.

ஸ்ரீலங்காவில் இது தொடர்பாக 5,749 வழக்குகள் நிலுவையில் உள்ளன. வடக்கு கிழக்கில் மனிதாபிமான அமைப்புக்களின் நடவடிக்கைகளிலும் தடைகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. நீண்ட காலத்தில் மனித உரிமை மீறல்களை தடுப்பதற்கு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவை அமைக்கவேண்டியது அவசியமானது' என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை யில் அனைத்துலக மனித உரிமைகள் கண் காணிப்புக் குழுவை அமைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகளுக்கான ஆணையாளர் லூய்ஸ் ஆபர் மீண்டும் மீண்டும் அழைப்பு விடுத்து வருகிறார் என்பதும் அதற்கு ஐக்கிய நாடு கள் சபையின் அதிகாரிகள், சர்வதேச மன் னிப்புச் சபை, மனித உரிமைகள் கண் காணிப்பகம் உட்பட ஏனைய அமைப்புக் களும் ஆதரவுக் குரல்கள் கொடுத்து வரு வதும் குறிப்பிடத்தக்கது. உள்ளூர் விசாரணை களில் தாம் நம்பிக்கை இழந்து வருகின் றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-ஐ)

## குறிகாட்டுவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணக்கஷ்டங்களை குறைக்கவேண் டும். பயணச் சேவைகளைத் தொடர்ந்து கிரம மாக நடத்தவேண்டும்.

★ குடாநாட்டு மக்களின் போக்குவரத் துக் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு குறி காட்டுவான் - தலைமன்னார் இடையே படகுச் சேவை நடத்த ஜனாதி பதியிடம் யாழ். ஆயர் கோரிக்கை ஒன்றை முன்வைத் திருக்கிறார்.

(அ-1-202-111)

## தேர்தல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பெரும்பாலும் கலந்தாலோசித்திருப் பார் எனவும் ஊகிக்கப்படுகிறது.

இதேசமயம் -

முஸ்லிம் அமைப்பு ஒன்றின் பெயரில் உள்ள அரசியல் கட்சி ஒன்றின் பெயரை முஸ்லிம் கட்சியாகக் காட்டாமல், பொது வான பெயருக்கு மாற்றுவதற்கான விண் ணப்பம் ஒன்று தேர்தல் ஆணையாளருக் குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்சியின் புதிய செயலாளராக முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகரான - பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த - ஒருவரின் பெயர் மேற்படி விண்ணப் பத்தில் குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

பதிவு செய்யப் பட்ட இந்த முஸ்லிம் அரசியல் கட்சியின் பெயரை மாற்றி அதைத் தாம் சுவீக ரித்து அக்கட்சி ஊடா கத் தமது புதிய அரசி யல் நகர்வை முன் னாள் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க, முன்னாள் அமைச் சர்கள் மங்கள சமர வீர, சிறிபதி சூரியா ராய்ச்சி ஆகியோர் முன்னெடுக்கலாம் என்ற பேச்சு கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாக அடிபடு கின்றது. அந்த அரசியல் கட்சியின் நிலைமை, அதற்குப் பெயர் மாற்றப்பட்டு விட்டதா, புதிய கட்சி நிர்வாகிகளைத் தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுவிட்டாரா, அவர்களின் விவரம் என்ன, உண்மையில் அந்த அரசியல் கட்சி ஊடாக மங்கள அணி நகர்வு களை எடுப்பதற்கு வாய்ப்புகள் உண்டா என் பன குறித்து தேர்தல் ஆணையாளரை நேரில் விசாரித்து அறிந்து கொள்வதற்காகவும் ஜனா திபதி அவரைத் தம்மைச் சந்திக்குமாறு அழைத் திருக்கலாம் என்றும் வேறு சில வட்டாரங் கள் தெரிவித்தன.

(உ)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

864 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

24 33 38 39

துலாம்

09-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5776973 - 5792238

ஜக்பொட் பரிசு ரூபா. 1,769,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 337,701 | 10/- | 3,377,010/- |
| 2 இலக்கங்கள் | 31,054 | 20/- | 621,080/- |
| 1 இல. + லக்கினம் | 30,680 | 30/- | 920,400/- |
| 2 இல. + லக்கினம் | 2,785 | 100/- | 278,500/- |
| 3 இலக்கங்கள் | 825 | 500/- | 412,500/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,769,350/- | - |
| மொத்தம் | | | 6,374,490/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,127 | | 7,397,990/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,523,600/-

தொடர் இல.1907783 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 மார்ச் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 5791085-6-76 |
| நுவரெலியா | 5777737-8-24 |
| கம்பஹா | 5777313-3-80 |
| பதுளை | 5790257-3-09 |
| கொழும்பு | 5791938-1-07 |


## தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- துன்பப்படுத்தும் - பாரிய மனித அவல மாகும்.

**இடம்பெயர்ந்தவர்களை எங்கே தங்கவைக்கப் போகிறது?**

தங்களின் உயிர்களுக்குப் பயந்து இந்த மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர். அவ்வாறு வந்த மக்களை அரசு எங்கே தங்கவைக்கப் போகின்றது?

எப்படி அவர்களுக்கு அடிப்படை வசதி களைச் செய்துகொடுக்கப் போகின்றது என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஏற்கனவே வாகரை, கதிரவெளி, திரு கோணமலை ஆகிய இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பு அரச கட் டுப்பாட்டுப்பகுதிகளில் தற்போது முகாம்களில் தங்கியுள்ள மக்கள் எதிர் நோக்கும் அசௌகரியங்கள் சொல்லில் அடங்கா.

அவர்கள் தங்கியிருக்கும் கூடாரங்கள் வெய்யில்காலத்தில்தாக்குப்பிடிக்கக்கூடிய வையல்ல. அத்தோடு, குடிதண்ணீர், மல சலகூடம் போன்ற வசதிகளும் அவர் களுக்குப் போதாதுள்ளன.

இந்த நிலையில், மேலும் ஒன்றரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களை அரசு எப்படிக் கவனிக்கப் போகின்றது? அம் மக்கள் தமது வயல் நிலங்களை யெல்லாம் அப்படியே விட்டு விட்டு வந்துள்ளனர். இது அறுவடைக் காலம். இதனால் அவர்கள் பொருளாதார ரீதியாகவும் பாரிய பின்னடைவை எதிர் நோக்கியுள்ளனர்.

**பாடசாலைகள், அலுவலகங்கள் இயங்கமுடியாத நிலையில்**

ஷெல் தாக்குதல் காரணமாக மக்களின் வீடு வாசல்கள் உட்பட அனைத்துச் சொத்து களுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள் ளன. மட்டக்களப்பு நகரில் இருந்து புலி களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி படையினர் ஷெல் தாக்குதல் நடத்துவ தால் நகரிலுள்ள கட்டடங்கள் அதிர்கின்றன.

தற்போது நகரிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்கள் பல இயங்க முடியாத நிலையில் மூடப்பட்டுள்ளன. இதனால், மாணவர்களின் கல்வி நடவ டிக்கை பாதிக்கப்படுகிறது.

எனவே, அரசு இராணுவ நடவடிக்கை யில் மாத்திரம் முனைப்புக் காட்டாமல் எமது மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண் டும். அவர்கள் பாதிப்புக்குள்ளாவதைத் தடுக்க வேண்டும் - என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ண சிங்கம்.

(அ-ஐ)

# மரண அறிவித்தல்கள்

## M.A. வேதராஜா



**(யாழ்.புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், '''உதயன்'' நிறுவனம் ஆகியவற்றின் முன்னாள் ஒப்புநோக்குநர்)**

இல.18, மார்ட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த M.A.வேதராஜா நேற்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - விக்ரோரியா தம்பதியரின் மகனும், லில்லிமேரியின் (ராசம்) அன்புக் கணவரும், அகஸ்ரின் ஜீவரெட்ணத்தின் (ஜேர்மனி) அன்புத் தந்தையும் மேரி நீற்றாவின் மாமனும், மரியவதனா, மரியசுவோதனா, யூட்சிலோஜன், அந்தோனி பிரபாகரன் (பெரியவிளான்), நியூமன் (பிரான்ஸ்) ஆகி யோரின் பேரனும், சோபிகா, அஸ்வின், மெல்வின், பிரவீந்தன் ஆகி யோரின் பூட்டனும் காலஞ்சென்ற ஆசிரியமணி M. விக்ரரின் (யாழ். ஜெயம்) சகோதரரும் திருமதிகள் விக்ரர் எலிசபெத்து, சீ. அந்தோனியாப் பிள்ளை, அ.மேரியோசப்பின், ச.மேரி மாகிறேட் ஆகியோரின் மைத்துன ருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.03.2007) திங்கட் கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ். அடைக்கலநாயகி (O.L.R) ஆலயத் தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மரியன்னை பேராலய சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**இல.18 மார்ட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.** (சி-52189) **வேதராஜா லில்லிமேரி (மனைவி).**

## இராசரத்தினம் மகேஸ்வரன் (ஈசன்)



(சுவைச்சோலை - நல்லூர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மகேஸ்வரன் நேற்று (11.03.2007) ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தையா (ஆசிரி யர்) - காலஞ்சென்ற இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மரு மகனும் சந்திரறஜனியின் அன்புக் கணவரும் இராகவன் (இந்தியா), தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி (கனடா), அமரர் வன்னியசிங்கம், புனிதவதி (இந்தியா), குணபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சிவலிங்கம் (கனடா), சுப்பிரமணியம் (இந்தியா), பாலச்சந்திரன் (ஜேர்மனி), பாலமுருகன் (அமெரிக்கா), பாலமோகன் ஆகியோரின் அன்பு மைத் துனரும், மாலா (கனடா), சந்திரவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரமேஸ் வரனின் அன்பு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சங்கிலியன் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.** (58741) **சந்திரறஜனி (மனைவி), தர்சன் (மகன்).**

## திருமதி கிருஷ்ணசாமி தங்கரெத்தினம்



தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும் 588/12, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணசாமி தங்கரெத்தினம் நேற்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கிருஷ்ணசாமியின் (RMP) அன்பு மனைவியும் நரேந்திரா, மனோகரன் (லண்டன்), பாலச்சந்திரா (லண்டன்), ஞானச்சந்திரா (லண்டன்), வத்சலாதேவி, சறோஜா (கனடா), சாந்தினி (ஆசிரியர், மானிப்பாய் சென். ஆனஸ்), ரவிச்சந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் நாகலெட்சுமி, தேவகன்யா, வளர்மதிதேவி, ரவிவதனா, ம.சிவா னந்தா (வலய முகாமையாளர், NSB, யாழ்ப்பாணம்), அருளானந்த ராஜா, புஸ்பநாதன், (ஆசிரியர்- மானிப்பாய் மகளிர் கல்லூரி), விஜிதா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.07) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவு டல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**588/12, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.** (58740) **குடும்பத்தினர்.**

## திருமதி இராசையா கமலாட்சி

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கமலாட்சி 09.03.2007 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மங்கயர்க்கரசி, சிவதாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீகாந்தன், கமலகாந்தன் (ஆஸ்திரேலியா), இராசகாந்தன், கமலராணி (கனடா), கமலேஸ்வரி (டென்மார்க்), விமலகாந்தன் (கனடா), ஜெயகாந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் சிவதாசன், சிவபாலன், இராஜேஸ்வரி, மனோகரி, சாந்தகுமாரி, ராஜினி, பகீரதி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.03.2007) திங்கட்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

**உடுவில் தெற்கு, சுன்னாகம்.** (58742) **இராசகாந்தன் (இராசு - மகன்).**

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா சரஸ்வதிப்பிள்ளை



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட கந்தையா சரஸ்வதிப்பிள்ளை நேற்று (11.03.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - வள்ளியம்மை தம்பதியரின் மகளும் இராசம்மா, தெய்வானைப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்லம்மா, சுப்பிரமணியம் (வர்த்தகர்), நவரத்தினம் (இ.போ.ச. நடத்து நர் வவுனியா), மனோன்மணி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற அருளானந்தம் மற்றும் இலட்சுமணன், காலஞ்சென்ற இராசரத்தினம், கமலாதேவி, லலிதாதேவி, நாகேஸ்வரன் (ஈசன்) ஆகி யோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், பாக்கியம், குமாரசாமி ஆகியோரின் சிறியதாயும் மல்லிகாதேவி, லோகநாதன் (ஜேர்மனி), பத்மநாதன் (ஜேர்மனி), வசந்தாதேவி (ஜேர்மனி), சிவச் செல்வன் (சுவிஸ்), கலைச்செல்வன் (இந்தியா), எழில்செல்வன் (லண் டன்), சற்குணராசா (ப.நோ.கூ. ச.யாழ்ப்பாணம்), கணேசராசா (கால்நடை வைத்திய பணிமனை, வேலணை), ரோஜிந்தன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை - காரைநகர்), காலஞ்சென்றவர்களான சோமஸ்கந்த ராசா, சுகந்திரகுமார் மற்றும் சுபாஜினி (லண்டன்), உதயகுமார், தர்சிகா, மேனகுமார், கோபி கிருஷ்ணன், காலஞ்சென்ற கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக் கையாறு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**சித்தன்கேணி.** (58743) **இ. ரோஜிந்தன் (கலைக்கியல் ஆசிரியர்)**


**விற்பனைக்குண்டு**

CANON 1215 போட்டோபிரதி இயந்திரம் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ளவும்:

021 226 3385

077 6529041.

**NEW PHYSICS CENTRE**

(யாழ். இந்து மகளிர் கல்லூரி முன்பாக)

இல. 03, அரசடி வீதி, யாழ்.

2009 A/L - பௌதிகவியல்

ஆரம்பம்: Tues 13.03.2007 - 4.30 p.m.

By: K.S. SASIKARAN B.Sc (Edu.)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறு[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org